# ஆத்ம ஜோதி.



மணிதரளம் வீசி யணி யருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள் காண்


| சோதி 1 | விரோதி ஞு ஆடி மீ | சுடர் 9 |
| --- | --- | --- |

# ஆத்ம ஜோதி.

## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | கதிர்காமக்கந்தன் தோத்திரம் | 249 |
| 2 | பிரார்த்தனை | 250 |
| 3 | குமரகுருபரசுவாமிகள் (II) | 251 |
| 4 | கீதாஞ்சலி | 256 |
| 5 | கந்தரனுபூதி | 257 |
| 6 | நாம ஜபம் | 259 |
| 7 | அடியார்வழிபாடு | 263 |
| 8 | சாதகர்க்குத்துணை | 266 |
| 9 | கதிர்காம க்ஷேத்திர மகிமை | 267 |
| 10 | கதிர்காமயாத்திரை | 269 |
| 11 | வேதாந்த தத்துவ விளக்கம் | 272 |
| 12 | ஆத்ம ஜோதி | 274 |
| 13 | திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி | 277 |
| 14 | செய்தித்திரட்டு | 279 |
| 15 | சமரசசன்மார்க்க வாசிகசாலை | (உள்கவ[illegible]) |



— ஆத்ம ஜோதி —

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

விலாசம்:

"ஆத்மஜோதி" நிலையம், நாவலப்பிட்டி, (சிலோன்).

சந்தா விபரம்:

ஒருவருடம் ரூ. 3/- ஆயுள்சந்தா ரூ 75/- தனிப்பிரதி ச. 30


276ம் பக்கத்தொடர்ச்சி.

செய்யுங் காரியம் மெய்யன்புடையோர் இவ்வழுக்காறுகளைக் கண்டு பரிதபித்துத் துயருறுவர். ஆகவே யதார்த்த வாதிகளது நேர்மை மெய்யன்பிற்குச் சான்றாகும். 'சத்தியமே ஜெயம்' என்பது மகாத்துமாக்களது மதம். நாமும் அதையே கடைப்பிடித்தல் நன்று. பகவானது பொற்பாத கமலங்களைக் கண்டு ஆநந்தமடையவேண்டுமானால் மெய்யன்புடன் சீலமான துறைகளில் சிந்தையைச் செலுத்திப் பொறுமை, தயை, பணிவு, விநயம், சுயநலங்கருதாமை, கபடமின்மை, சத்தியம் இவ்வேழு காந்திக்கிரணங்களை ஒருங்கே கூட்டிச் சுயம்பிரகாசச் சுடர்விளக்கை ஏற்றி ஆத்மஜோதியைப் பிரகாசிப்பித்தல் அத்தியாவசியம்.

சகோதரிகளே வணக்கம்.

ஓம்

# ஆத்ம ஜோதி.

"எண்குணத்தான், ஏகனே யெல்லா மடங்கவுளான்
புண்ணியனும் போதப் பொருள்."—சுத்தானந்தர்.


| சோதி 1 | விரோதிஸூ ஆடிமீ | சுடர் 9 |
|---|---|---|


## கதிர்காமக்கந்தன் தோத்திரம்.

சந்ததமு நினதருளைச் சார்ந்துவாழ்ந் திடுகின்ற
சற்சனர்த முறவுவேண்டும்
'சரவண பவாகுகா சண்முகா' வென் றுநிதம்
சாற்றடியார் நேயம்வேண்டும்
சிந்தனையி லுந்தனது சித்துரு தியானிக்குஞ்
சிவயோகர் ஆசிவேண்டும்
சீவர்களின் சேவையே சிவபூசையாய்க் கொண்ட
சீவர்களின் சேர்க்கைவேண்டும்
பந்தம தகன்றிட்ட பரமஞா னியர்பதம்
பற்றிப் பிடித்தல்வேண்டும்
பாரெங்கு மவர்மொழி பரவிடும் பணியில்யான்
பங்கெடுத் துய்யவேண்டும்
'கந்தா! விசாகனே! கருணாகரா!' வென்று
கத்துநெறி தருதல்வேண்டும்
கதிர்காம க்ஷேத்திரந் தனிலமர்ந் தன்பர்க்குக்
கருணைமழை பொழிதெய்வமே.

—க. இ.

உ

# பிரார்த்தனை.

கலியுகத்துக் கண்கண்ட கற்பகமே
　　கருத்தினிக்கும் கரும்பே தேனே
வலியிழந்து பிணியடைந்தேன் மலரடியே
　　துணையென்று மருந்து கண்டேன்
நலிவழித்துப் பொன்னுடலம் நல்கியருள்
　　நாயகனே ஞான நாதா
கலிகடலில் மலரில்வகைக் கதிரவேற்
　　பெருமானே! கருணைத் தேவே!

பகலெல்லாம் நின்நினைவே இரவெல்லாம்
　　நின் கனவே பாவி யேற்குச்
செகமெல்லாம் நினைக்காணச் சிவகுருவே
　　யெழுந்தருளச் சிந்தை கொள்க
குக வென்றால் பிடியுடனே கொல்யானை
　　ஒதுங்கி நிற்குங்குணமே மல்கக்
கனகவழிச் சித்தர் தொழுங் கதிரைவேற்
　　பெருமானே! கருணைத்தேவே!

சாதிமதப் பிணக்கின்றிச் சமரசமா
　　யெல்லோருஞ் சார்ந்து நின்றே
ஆதியந்த மில்லாத அறுமுகனே
　　யென்றுன்னை யாற்று கின்றார்
சோதி! நினதருளவர்க்குத் துணைபுரிதல்
　　இயல்பன்றே சொல்ல வொண்ணுக்
காதலன்பு கரைகடந்த கதிரைவேற்
　　பெருமானே! கருணைத்தேவே!

—திரு. வி. க.

# குமரகுருபர சுவாமிகள்



(ஆசிரியர்)

சாதியாலும், சமயத்தாலும், மொழியாலும் வேறுபட்ட மக்களிடையே, குமர குருபர அடிகள் தன்னந்தனி மனிதனுய்ச் சென்று, சைவசமயப் பெருமையை நிலை நாட்டுவதற்கு அவரது அபாரமான ஆத்ம சக்தியோடு அவரிடத்தியல்பாகவே யமைந்திருந்த அளவற்ற சித்திகளுங்காரணமாகும். காலமும் இடமும் தேவைப்பட்ட முறையில் அவர் பலவித அற்புதங்களைச் செய்திராவிட்டால் அந்நியர்கள் அவரை மதித்திருக்க மாட்டார்கள்; அவர் கோரிய சிவத்தொண்டுகள் செவ்வனே நிறைவேறியிரா. அவரால் காசியில் நிறுவப்பெற்ற நிலையமொன்றில் அமைந்துள்ள கல்வடிவம் அவர் உயிருள்ள சிங்கத்தின் மேலேறி மொகலாய சக்கரவர்த்தியின் சபையில் அமர்ந்திருந்த உண்மையை நிரூபிக்கின்றது. சகல கலாவல்லியின் கடாட்சத்தால் இந்துஸ்தானி மொழியில் அவர் பெற்ற புலமை அரசனையும் அவனது அரண்மனை வித்துவான்களையும் வியப்புறச் செய்தது. அவர்மீது அரசன் கொண்டிருந்த நன்மதிப்பு நாளுக்கு நாள் வளர்வதைக் கண்ட இஸ்லாமிய குருமார்கள் சிலர் (மௌல்விகள்) பொறாமையுற்று, அந்த மதிப்பைக் குறைப்பதற்குங் கெடுப்பதற்கும் பலவித சூழ்ச்சிகள் செய்தனர். அவற்றையெல்லாம் அடிகள் அற்புதச் செயல்களினாலே வென்றனர். பின்னர் தமது சிவத்தொண்டுகளுக்குத் தேவையான இடங்களை யெல்லாம் விரும்பிய வண்ணமே பெற்று, காசியில் கங்கைக்கரையில் சிவலாயங்களையும் மடங்களையுங் கட்டுவித்தனர். இவற்றுள் சிறந்தா விளங்கியவை திருக்கேதாரேசுவர ராலயமும் குமாரசாமி மடமுமாகும்.

இமயமலைச்சாரலை யடுத்துள்ள நேபாள நாட்டில் முகரங்கி யென்னுமிடத்தில் வாகீச முனிவரால் கட்டப்பெற்ற சைவமடமும் அடிகளின் கருத்தின்படி நிறுவப்பட்டதேயாம். சைவர் வேண்டும் சிவ கண்மணிகள் அங்கிருந்தே காசிக்கு அனுப்பப்பட்டன. காசியில் விஸ்வநாதப்பெருமானைப்போதிய வசதிகளுடன் வணங்கும் பேற்றை நமக்கு அளித்தவர் குமரகுருபரரே. சைவ உலகு என்றென்றைக்கும் அவருக்கு நன்றி பாராட்டுவதற்கு இந்த ஒரு தொண்டே போதுமானதாகும். அவருக்குப் பின் அவர் ஸ்தாபித்த நிலையங்களைப்பரிபாலித்தோர் அவர் காட்டிய செந்நெறியைப்

பின்பற்றி யிருப்பார்களாயின், வடநாடு எங்கணும் சைவ சித்தாந்தம்பரவியிருக்கும்; காசி சர்வ கலாசாலையில் சைவ மதத்தைப் போதிப்பதற்கென இருபதாம் நூற்றுண்டில் தெந்நாட்டிலிருந்து ஓர் ஆசிரியரை அனுப்பவேண்டிய தேவை ஏற்பட்டிராது. அடிகளால் காசியில் நிறுவப்பட்ட தலைமை நிலையம், அவருக்குப்பின் ஆறுவது தலைவராக வந்ததில்லை நாயக சுவாமிகளின் காலத்தில் (கி. பி. 1720) சோழ நாட்டிலுள்ள திருப்பனந்தாளுக்கு மாற்றப்பட்டதே வடநாட்டுச் சைவப்பிரசாரத்தளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். தில்லைநாயகருக்குப்பின் வந்தோரெல்லாம், காசிநிலையத்தை திருப்பனந்தாள் மடத்தின் கிளையாகவே கொண்டனர். பிந்திய மடத்தின் இரண்டாவது தலைவர் குமரகுருபர சுவாமிகள் என்னும் நாமத்தையே கொண்டனர். இவர் தாயுமானுர் காலத்தைச் சேர்ந்தவர். இந்த உண்மையை அறியாத சிலராலேயே ஆதி குமர குருபரரும் தாயுமானுரும் ஒரே காலத்தவரென்ற கதை சிருஷ்டிக்கப்பட்டதாகும். தாயுமானுரை ஆதரித்த விஜயரங்க சொக்கநாத நாயக்கன், காலத்தால் திருமலைநாயக்கனுக்கு அரை நூற்றுண்டு பிந்தியவன். தமிழ் நாட்டில் மிகப் பிரசித்தி பெற்ற ராணி மங்கம்மாள் அரசு புரிந்தது இவ்விரு நாயக்க மன்னர்களின் இடைக்காலத்திலாகும்.

வடநாட்டிலே இஸ்லாமிய மதத்தினர் நடுவில் சைவப்பிரசாரஞ் செய்தது போலவே, குமர குருபரனுர் தெந்நாட்டிலுஞ் சிவநெறியை விளக்கியதாக அறிகின்றேம். தில்லையில் ஏகான்மவாதிகளுடனும், திருவாரூரில் சிவசமயவாதிகளுடனும், திருச்சிராப்பள்ளியில் வைஷ்ணவர்களுடனும் அன்பான முறையில் சமயவாதஞ் செய்து அவர்களின் மயக்கத்தைத் தீர்த்தனர். திருவருட்புலமை பெற்ற அடிகளுக்கு யாப்பிலக்கணப் பயிற்சி உண்டோவெனச் சிதம்பரத்தில் கிண்டல் செய்த புலவர்களின் செருக்கறுக்கத்தோன்றியதே சிதம்பரச் செய்யுட் கோவையென்னும் அரிய நூல். கல்விச் செருக்குத்திய தென்பதை அவர் முன்னரேயே மதுரையில் அருளிய நீதி நெறி விளக்கம் பதினன்காம் பாடலில் நன்கு விளக்கி எச்சரிக்கை கொடுத்திருந்தும் பண்டித உலகு தனது கீழ்க்குணத்தை விடவில்லை. திருச்சியில் நாயக்க மன்னன் முன்னிலையில் நடந்த சமய வாதத்திற்குக் காரணமாயிருந்தவர் பிள்ளைப்பெருமான் ஐயங்காரென்னும் வைஷ்ணவர். இவர் இலக்கண இலக்கிய



வித்துவான், அதுகாரணமாக நாயக்கமன்னனின் மதிப்புக்குரியராயினர். ஆனல், சமய சாஸ்திர நுண்ணறிவோ திருவருட்பேரு உடையவரல்லர். விஷ்ணுபக்தி காரணமாக சிவமதத்தை மறுக்கத்துணிந்த இந்த ஐயங்காரின் அறியாமையை அடிகள் எளிதில் நீக்கியருளினுர். அரசாங்கக் காசுகள்மீது என்ன அடையாளம் போடலாமென்று அரசன் கேட்டபோது ஐயங்கார் 'கருடன்' என்றுர். 'கருடன் பறந்து வட்டமிட்டுச் சென்றுவிடும்; விடை முட்ட முட்டச் செல்லும் நல்த்தது' என ருசிகரமான மறுப்புக்கொடுத்து, இடபச்சின்னத்தையே அரசன் உவந்தேற்றுக்கொள்ளச் செய்தனர். மாசிலாமணி தேசிகரின் கட்டளைப்படி காசியையே தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டனரெனினும் அடிகள் மும்முறை குருநாதர் தரிசனத்திற்காகத் தென்னுடுவந்து திரும்பியதாக அறிகின்றேம். அவர் சிவசாயுச்சியமடைந்தது வைகாசித் திங்கள் கிருஷ்ணபட்சத் திருதியையிலாகும்.

குமரகுருபரர் இயற்றிய பிரபந்தங்களின் தொகை பதினறு. இவற்றை ஒவ்வொன்றுய் ஆராய்வதற்கு இக்கட்டுரை இடந்தராது. சுருங்கக்கூறின், சங்ககாலந்தொடக்கம் கி. பி. பதினேறும் நூற்றுண்டுவரைக்கும் தமிழ்மொழியில் தோன்றிய சாஸ்திர தோத்திர நூல்கள் சகலத்திலுமுள்ள நயங்களையெல்லாம் ஒருங்கே இப்பிரபந்தங்களிற் சுவைக்கலாமெனலாம். நக்கீரரின் பழைய இலக்கணநடை, வள்ளுவரின் அறநெறிவிளக்கம், கம்பரின் கவிநயம், கச்சியப்ப சிவாசாரியரின் கற்பனை, சேக்கிழாரின் பக்திரசம், புகழேந்தி, காளமேகம் முதலியோரின் சிலேடைநயம், அருணகிரிநாதரின் சந்தம், வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களின் நுட்பம், திருக்கோவையாரின் அகப்பொருள் துறைகள், இவையெல்லாம் அடிகளின் பாடல்களில் அழகாய் அமைந்துள்ளன. அவர்காலத்துப் பெண்கள் கழுத்தில் அணிந்த நகைகளின் வெவ்வேறு தினுசுகளை அறிந்துகொள்வதற்கும் அவர் தமது பிரபந்தங்கள் சிலவற்றிற்குக் கொடுத்துள்ள, இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, என்ற பெயர்கள் உதவியாயுள்ளன.

வைஷ்ணவம், இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கியம் முதலிய பிறமதங்கள் பரவியிருந்தகாலத்தில் அவதரித்தவராகையாலும், அந்தமதங்களைச் சார்ந்தவர்களின் மத்தியிலே துவேஷ மனப்பான்மையின்றி வாழ்ந்த காரணத்தினுலும், சைவத்தின் சமரசத்தை

இந்தியா முழுவதிலும் உபதேசிக்கும் அருஞ் சந்தர்ப்பம் அடிகளுக்குக் கிடைத்துள்ளது. இதயேசனாகிய இறைவன் எல்லாருக்கும் பொதுப்பொருளாயும், ஒவ்வொரு சமயத்தோர்க்கும் அவ்வவர் கூறுஞ் சிறப்புப்பொருளாயும் இருந்து சீவர்களை வளர்க்கிறானென்ற உண்மையைத் திருவாரூர் நான்மணிமாலையில் அழகாய் விளக்குகிறார்:—

"இதுவே பொருளென் றெவர் எவர்
கூறினும் ஏற்பது எது
அதுவே பொருளென் றறிந்து கொண்டேன்
அப்பொருள் எவர்க்கும்
பொதுவே யென்றானும் பொருந்து
மெல்லோர்க்கும் பொதுவில்நிற்கும்
மதுவேய் மலர்ப் பொழில் ஆரூரினும்
வைகும் வைகலுமே."

இந்தப்பாட்டில் 'ஆரூரினும்' என்ற பதத்தை இருபொருள்பட உபயோகித்திருப்பதை உற்றுநோக்குக. சமரசத்திற்கடுத்த மேற்படியாக அடிகள் உபதேசித்தது மெய்த்தொண்டர் பெருமையைப் பற்றியாகும். இன்னுமொருபடி கூட ஏற்றிவைத்திருப்பது குரு பக்தியையெனலாம். அவரது பதினாறு பிரபந்தங்களுள் தலையாய்க் கொள்ளத்தக்கது 'பண்டாரமும் மணிக்கோவை'யேயாம். இதற்குமாத்திரந்தான் அவர் நூற்சிறப்பும் நூற்பயனுந்தந்துள்ளார்.

அதுமாத்திரமோ, இக்கவி முற்றினையும் தாம் தமது கள்ளப் புலன் கொண்டுரைக்கவில்லையென்றும், உள்ளத்தே அருள் நின்றுணர்த்த, தமது நாவில் வெள்ளை வள்ளக்கமலத்தவள் நின்று பாடியதாகவும் வற்புறுத்தியே இப்பிரபந்தத்தை முடித்துமுள்ளார். தம்மை ஆட்கொண்டு அருள் சுரந்த மாசிலாமணித்தேசிகர்மீது பாடப்பெற்ற இத்தோத்திர நூலில் குரு பக்தியும் தொண்டரது உறவின் பெருமையும் விசேட இடம் பெற்றுள்ளன. தெந்நாட்டில் அருகியும் வடநாட்டில் பெருகியுமிருந்த சில நல்ல வழக்கங்கள் அடிகளின் உள்ளத்தில் ஆர்வக்கனலைத் தூண்டியிருக்கலாம். தேசிகரை விளித்து அவர் பக்தியுடனும் பணிவுடனும்



"நான்மறைக் கிழவ! நற்றவ முதல்வ!
நான்முறை பயின்ற நுண்மைசா லறிஞ!
சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்க் கவிஞ!
கற்றவர் வியக்குங் காவியப் புலவ!
செவிதொறுஞ் செவிதொறுந் தெள்ளமுதூட்டுபு
கவிஞர் வயினிரப்புங் கல்விப் பிரசங்க!
வெள்ளிடைத் தோன்று துள்ளத் துணர்த்தவுஞ்
சேய்நிலை நின்று திருக்கண் சாத்தவுஞ்
சாயமும் மலைச் சகலரேம் உய்ய
எம்முருக் கொண்டும் எம்மொடு பயின்றும்
மும்மலக் கிழங்கை முதலொடும் அகழ்ந்து
சிற்பர புணர்த்துஞ் சற்குரு ராய!"

எனப்பாராட்டிய உரைகளெல்லாம் அவருக்கும் பொருந்துமெனத் தயங்காமற் கூறலாம்.

ஊரும் பேரும் இல்லாத ஞானகுருவிற்கு அவை உண்டெனத் தாம்கூறியதற்காக, அவரும் அதற்கொப்பவே, பொய்யென்று முதலிற் சொன்ன ஒன்றைப் பின்னர் மெய்யென்றும், மெய்யென்று முதலிற் சொன்ன இன்னொன்றைப் பின்னர்ப் பொய்யென்றுங் கூறி மருட்டினரென அடிகள் பாடிய கீழ்க்கண்ட வெண்பா பக்தர்கட்கும் பண்டிதர்கட்கும் அரும் விருந்தாகும்:—

ஆரூரே யூர்பே ரருண்மாசி லாமணியென்
றோரூர்பே ரில்லாற் குரைத்தேற்குப்—பாரேறப்
பொய்யென்றான் மெய்யென்றான் பொய்யான பொய்யுடலை
மெய்யென்றான் பொய்யென்றான் மீண்டு.

உலகு, உடல் இரண்டையும்பற்றிய அரிய தத்துவங்கள் இதில் அடங்கியுள்ளன. காரியவகையில் நிலைத்திராமையால் உலகு பொய்யாகியும் காரணத்தில் ஒடுங்கிநிற்பதால் அது மெய்யாகியுமுள்ளது. அதேபோல், மங்கல வழக்கில் 'மெய்' யென அழைக்கப்படும் உடலும் வினையிருக்கும்வரையில் நிற்பதால் மெய்யாகியும், வினை முடிந்ததும் இல்லாமற்போவதால் பொய்யாகியும் விடுகின்றதென்பதாம்.

மாசிலாத் தேசிகரவர்களின் சந்நிதான மகத்துவத்தையும், அந்த மஹான் உயர்வு, தாழ்வு பாராது, தம்மையடைந்த அன்பர் யாவர்க்கும் வள்ளல்போல் அருள்வளங்கிய விதத்தையும் விளக்குமிடத்தில்,

# கீதாஞ்சலி.

(சாதகன்) (1)

உலகெலாம் நிறைந்த உதயசோதி
அலகிலா ஆடல் அவனியில் புரிந்து
நலமெலாம் விளைய ஞானமுந் தந்து
முடிவிலா நிலையில் சிருஷ்டியை யாக்கினாய்
அதுவே நினது இச்சையென் றறிந்தேன்
சிருஷ்டியி லான மண்பாண் டத்தை
விதிவச மென்னும் விடுகதை கூறி
நித்த நித்தம் நிர்மூல மாக்கி
புத்தம் புதிய புத்துயிர் நிறைக்கிறாய்
வேட்டார்ப் பிணிக்கும் வேய்ங்குழ லொன்றை
கையி லேந்திக் காடு மலையெலாம்
போகு மிடமெலாம் போகா இடமெலாம்
அமுத கீதம் அள்ளிச் சொரிகிறாய்
சாகா வரம்தரும் நின்கரம் தீண்டினாய்
எழை உள்ளம் இன்பங் கடந்தது
இன்ப முடிவில் மோன மாகி
இதய ஊற்றில் அணையிலாக் கவியும்
எழுந்தே பாட எண்ணு கின்றது
சின்னஞ் சிறிய கைகள் நிரம்பி
செழித்து ஓட பலகொடை அருள்கிறாய்
யுகம்யுகம் நின் கொடை கருணைப் பிரவாகம்
குவிந்து பெருகினும் குறையிரந்து நிற்கிறேன்.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

"கற்றன ராயினுங் கல்லா ராயினும்
அற்றனம் யாமென அடைந்தனர் தமையெனிற்
காலம் பாரார் கருத்தினை யளவார்
சீல நோக்கார் தீக்குணங் கொள்ளார்"

என்கிறார் குமரகுருபரர். இது வெறுங்கற்பனையல்ல, நாம் நேரிற் கண்கூடாகக் காணக்கூடிய ஓர் காட்சியே என்பதை பகவான் ஸ்ரீ ரமண மூர்த்தியின் சந்நிதானஞ் சேரும் பாக்கியம் பெற்றோர் எவரும் நன்கறிவர். இரண்டாவது சங்கரரெனவும் குட்டித் திருஞானசம்பந்தரெனவும் போற்றப்படும் உயர்ந்த நிலையையடைந்த குமரகுருபரசுவாமிகளால் கண்கண்ட தெய்வமாகவே வழிபடப்பட்ட மாசிலாமணித்தேசிகர் எழுந்தருளியிருந்த மடத்தின் தற்போதைய நிலை மிகவும் வருத்தந்தருவதாகும்.

---

# கந்தரனுபூதி.

—:-:—

(சாது ஸ்ரீ முருகதாஸ்)

**மனத்திற்குபதேசம்.**

"கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே."

ஏ மனமே! தேகத்தால் உணர்ந்தும், வாயால் புகழ்ந்தும், மூக்கால் வாசனையை முகர்ந்தும், கண்ணால் பார்த்தும், செவி குளிரக் கேட்டும் உன்னுடைய உலக ஆசைகளைப் பூர்த்திசெய்து கொள்ள எண்ணி வீணாக வினைவலைப்பட்டு இந்திரியங்களும் அழிந்து நீயும் அழிகிறாய். அவைகளும் நீயும் அழியாவகைகேள். நான் என்ற அகங்காரத்தை ஒழித்து விடு. முக்கியமாக ஆசைகளைப் பூர்த்திசெய்து கொள்ள உதவுவதான கையையும் வாயையும் வேல் தாங்கிய அழகனுடைய பாதார விந்தத்தில் அர்ச்சித்து அணைத்துக்கொள்ளவும், ஆனந்தமாகப் பாடவும் செய்வித்தால் என்றும் அழியா ஆனந்தம் பெற்று நானற்று வாழ்வாய் மனமே கதிகேள்! கதிர்வேல் முருகன் கழல்பெற்றுய்வாய்!

## குறிப்பு.

உலகில் மனத்தைப்பற்றிய ஆசையே இறப்பிற்கும் பிறப்பிற்கும் காரணம். அதற்குக் கருவியாக இந்திரியங்கள் உபயோகப்படுகின்றன. ஆசையேயற்ற நிலையில் நம்மால் வாழமுடியாது இந்திரியங்களை அறவே அடக்குவதும் சிரமம் தான். ஆனால் சுலபமாக இந்திரியங்களும் ஆசையும் அழியாது வாழ்ந்து புனிதமடைய ஆசையெல்லாம் அவனிடமும் இந்திரியங்களை அவன் பணிக்குமாக்கவேண்டும். எல்லாக் காரணங்களையும் கட்டுப்படுத்துவது கஷ்டந்தான். முதலில் கைகளையும் வாயையும் அவனை அர்ச்சிக்கவும் பாடவும் கட்டுப்படுத்திவிட்டால் மற்றக் கரணங்களும் நாளடைவில் அகமாயை ஜெகமாயை இரண்டையும் கடந்து விளையபிந்து உண்மையான ஆனந்தமடைந்து மனத்துடன் ஆண்டவன் பணி செய்து அழிவில்லா இன்ப நிலையில் வாழலாம் என்பது உண்மை. மனமே இந்திரியங்களின்தலைவன். மனத்திற்கு நல்வழி சொல்லித் திருத்தினால் அதன் தாஸர்களான இந்திரியங்கள்

தானாக வழிக்குவரும். ஆகையால் மனத்திற்கு உபதேசம் செய்து ஆனந்தமடைவோமாக.

உய்வாய் மனனே! முருகன் கழல் பெற்றுய்வாய் மனனே! மனமடங்க மாயை ஒடுங்கும்.

"கிரிவாய் விடுவிக் கரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே"

ஏ மனமே! கிரௌஞ்சமென்ற மாயமலையானது பிளக்கும்படியாக விடும் பராக்ரமம் பொருந்திய வேலாயுதத்தையுடைய தெய்வத்தின் அடியார் கூட்டத்துள் ஒருவனாகி, அவர்களுடன் எப்பொழுதும் அழியா நேசங்கொண்டு அன்புடன்சேவைசெய்வாய் அப்படிச் செய்து அடையும் பொறுமையுள்ள ஞானம் நிறைந்த அறிவு என்னும் சுடர்வடிவான வாளைக்கொண்டு அகந்தையெனும் பெரிய காட்டை கொஞ்சமும் மிச்சமின்றி வேரோடு வெட்டித் தள்ளுவாய். இதுவே இறைவனை அடையும் சுலபமான வழி. மனமே கதிகேள்!

## குறிப்பு.

ஆணவங்களான பெரிய மலைகளை பொடியாகப் பறந்து போகும்படி செய்யவல்ல ஞான சக்திபடைத்த ஆண்டவனுடன் எப்பொழுதும் ஆனந்தமனுபவிக்கும், அடியார்கள் சங்கத்தைத்தேடி அவர்களுள் ஒருவனாகச் சேர்ந்து, தற்பெருமை, கோபம் முதலிய கொடியவைகளை நீக்கி, அவர்களுக்கு எப்பொழுது என்ன பணி செய்யவேண்டுமோ அதைக் கேட்டுச் செய்து அம்மேலோருடைய அருளால் பொறுமையும் ஞானமும் பிரகாசிக்கும் அறிவைப் பெற்று அதனைக்கொண்டு "யான்" "எனது" என்ற ஆசைக்காட்டிலுள்ள துன்ப மரங்களையெல்லாம் வேரோடு வெட்டி இஷ்டம் போலத்திரிந்த அகங்காரப்பேயை வசமாக்கி, நல்வழிகாட்டி அன்புப்பானத்தைக் குடிக்கவைத்து இந்திரியங்களின் ஆட்சியை ஒழித்து, இக்கொடிய ஆசைக்காட்டை சாந்தி, நாடாக்கி, ஆனந்தமாக ஆளலாம் ஆகையால், அகங்காரப் பேய்பிடித்த மனத்திடம் சிக்

# — நாம ஜபம். —

—:—:—

(பாலசுவாமி)

மனிதரையும் கடவுளையும் ஒன்று சேர்ப்பது நாம ஜபம். பகவானின் நாம ஜபத்தின்மூலம் மனிதன் கடவுளுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளுகிறான். கடவுளின் அருளைப்பெற விரும்புகிறவன் இறைவனது எண்ணிறந்த நாமங்களில் எதையேனும் ஒன்றை உறுதியாக கைக்கொண்டு மர்க்கடம் போல் விடாப்பிடியாக அவனமுத நாமத்தை ஜபிக்கவேண்டும். சமயகுரவர்கள் சந்தான குரவர்கள், நாயன்மார்கள், ஆழ்வாராதிகள் முதலிய எண்ணிறந்த பக்தர்களும், ஞானிகளும் நமக்குப் போதித்ததும் கடைப்பிடித்ததும் பகவானின் நாமமந்திரமே. பல்லவ அரசர் அப்பர்பெருமானை கல்லைக்கட்டி கடலில் தூக்கி எறிந்தபோது அவர்க்குப் பெருந்துணையாக இருந்து கரையேற்றியது நமச்சிவாய என்கின்ற திருமந்திரமே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.

ஆம், எவ்வளவு உண்மையான மருந்து இதில் பொதிந்துள்ளது. வாழ்வு என்ற கடலில் உடல் என்ற கல்லோடு நாம் ஒவ்வொருவரும் பிணைத்து விடப்பட்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட

---

முற்பக்கத் தொடர்ச்சி.

கிக்கொண்ட ஜீவன் அதன் இச்சைப்படி போகாமல் உள்ள அறிவின் பலத்தைக்கொண்டு அதற்கு உபதேசம் செய்து, அடியார் சங்கத்தை நாடச்செய்து, அவர்களிடம் பெற்ற ஞான அறிவான வாளைக்கொண்டு எல்லாவற்றையும் ஜெயித்து இன்பமடையலாம். அடியார்கள் சங்கமும் அன்புமில்லாவிட்டால் ஞானம் நிறைந்த அறிவு உண்டாகாது. அம்மேலான அறிவின்றி அமைதியில்லை ஆகையால் அடியார்கள் சங்கமே பெரிது. மனமே! "இறையோன் பரிவாரமெனும் பதமே வலையே புரிவாய்"

அபாயமான நிலையில் நமக்கு உறுதுணையாக நின்றுகாப்பவை சிவபெருமானின் நாமமாகிய நமச்சிவாய என்கின்ற அற்புத மந்திரம்.

> பொன்னைக் கொண்டு உரைகல் மீதே நிறமெழ
> உரைத்தாற்போல்
> உன்னைக் கொண்டு என் நாவகம் பால் மாற்றின்றி
> உரைத்துக் கொண்டேன்....................

பொன்னை நிறம் பார்ப்பதற்காக உரைகல்லில் இட்டு உரைப்பது போல உனது நாமத்தை என்னுடைய நாக்கில் உட்கொண்டு மாற்று அழியும்படி உரைத்துக்கொண்டேன் என்கின்றார் பெரியாழ்வார் என்னும் பக்தர். (நாவால் வரும் தீங்குகள் நீங்கிவிடும். இனி எனக்கென்ன பயம் என்றவாறு.)

> நாவாயில் உண்டே நமோ நாரணாஎன்று
> ஓவாது உரைக்கும் உரைஉண்டே—மூவாத
> மாக்கதிக்கண் செல்லும் வகைஉண்டே என்ஒருவர்
> தீக்கதிக்கண் செல்லும் திறம்?

பக்தர்களே! நாம் ஊமையராய் இல்லாதபடி நமக்கு நாவை இறைவன் கொடுத்துள்ளான்; அந்த நாவினாலேயே உச்சரிப்பதற்கு நமோ நாராயணா என்னும் திருமந்திரம் உள்ளது. இந்த மந்திர உபாயத்தைக் கொண்டே (மோக்ஷ) விடுதலைப் பேற்றை எய்திவிடலாம். அப்படி இருக்கும்போது எப்படி ஒருவர் தீய வழியில் போக முடியும்? (போகமுடியாது). இப்படி ஒரு கேள்வி போடுகிறார் ஒரு பக்தர். இந்தக் கேள்விக்கு விடை கொடுப்பது சிரமந்தான். அந்தப் பக்தருக்கு இருந்த உறுதி நமக்கிருந்தால் நாம் உய்வடைவது திண்ணம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி பகவானது நாமத்தை ஓதுதல் வேண்டும். அப்பொழுது அதில் ஒரு திவ்ய ருசியும் இன்பமும் உண்டாகும். இறைவனது நாமத்தை ஆரம்பத்தில் இயன்றமட்டும் ஜபம் செய்யப் பழகுக. பழக்கத்தின் பயனாய் மனம் தானாகவே ஜபம் செய்யத்தொடங்கிவிடும். நாம் சில சமயங்களில் ஜபத்தை மறந்துவிட்டாலும் ஜபத்தை தானாகவே அது ஓதிக்கொண்டிருக்கும். "நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்றார் சுந்தரர்.



> வன்மை செய்திடும் வறுமை வந்தாலும்
> மகிழ்வு செய் பெரு வாழ்வு வந்தாலும்
> புன்மை மங்கையர் புணர்ச்சி நேர்ந்தாலும்
> பொருந்தினாலும், நின்றாலும், சென்றாலும்
> தன்மை இல்லவர் சார்வு இருந்தாலும்
> சான்ற மேலவர் தமையடைந்தாலும்
> நன்மை என்பன யாவையும் அளிக்கும்
> நமச்சிவாயத்தை நான்மறவேனே.

என அருட்சோதி வள்ளலார் உறுதி கூறுகின்றார். அத்தகைய உறுதி நமக்குத் தேவை. அன்பும், நம்பிக்கையும், உறுதியும், இல்லாவிடில் பகவானது நாமம் நமக்குருசிக்காது. அவை வெறும் கேலி வார்த்தையாகவே முடியும். ஜபமென்பது, மூவகைப்படுவன. உரை, வாசகம், மானதம், வாயால் உரக்க ஜபித்தல், உதட்டோடு உச்சரித்தல், மனதோடு ஜபம் செய்தல், இம்முறைகளை மனம் எந்தெந்த நிலையில் எப்படி எப்படி வேண்டுகிறதோ அப்படி ஜெபிக்கலாம். ஜபம் செய்யும் பொழுதே, மந்திரத்தின் பொருளையும் மந்திரத்தின் உள்ளீடான தெய்வத்தையும் சிந்தித்து ஜபம் பழகுதல் வேண்டும். இதுவே சிறப்பான முறை. ஆரம்பத்தில் ஜபம் செய்வதற்கு குறித்த நேரம் தேவை. இந்த குறிப்பிட்ட நேரத்தில் எத்தனை அலுவல்கள் இருந்தாலும் அதனை ஒரு புறம் ஒதுக்கி ஜபம் செய்வதற்கு நீங்கள் கண்டிப்பாக அமர்ந்திடவேண்டும். இது மிகவும் வேண்டற்பாலது. அமர்ந்தவுடன் ஜபத்தை ஆரம்பித்துவிடலாகாது உங்கள் முன்னிலையில் தோற்றமளிக்கும் வழிபடும் மூர்த்தியை நன்றாகக் கவனித்து மனக்கண்முன்பு அவ்வுருவத்தை நிறுத்திக்கொண்டு அந்த உபாசனா மூர்த்தியிடம் முதலில் பிரார்த்தனையை ஆரம்பிக்கவேண்டும். அதன்பின் அருட்பெரியார் பாடல்கள் சில ஓதி அப்பாடல்களின் கருத்தை நன்றாகச் சிந்தித்து ஜபம் செய்யத்தொடங்கவேண்டும். எண்ணிக்கையுடன் ஜபத்தை ஆரம்பம் செய்க. அதற்கு ஒரு ஜபமாலை தேவை. 108 அல்லது 1008 என்று ஒரு கணக்கை வரையறுத்துக்கொண்டு ஜபம் செய்வது நல்லது. ஏமாற்றும் குணம் மனத்திற்கு இயற்கையான சுபாவம். நீங்கள் ஜபம் செய்ய அமர்ந்ததும் இம்மனம் உங்களை பல வழியிலும் ஏமாற்றவே பார்க்கும். எண்ணங்களை அலையலையாக

கொண்டுவந்து விடும். கவனம், விழிப்போடு இருந்து எண்ணங்களுக்கு இடம் கொடாது ஜபத்தை தீவிரமாக உச்சரிக்கவேண்டும். சில சமயங்களில் ஜபத்தை விட்டு எண்ணங்களினூடே நீங்கள் போகும்படி நேர்ந்துவிடும். அப்போது நீங்கள் ஜபத்தை ஆரம்பித்ததிலிருந்து மீண்டும் தொடர வேண்டும். ஜப எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும். மனத்திற்கு நீங்கள் எந்த வழியிலும் இளக்கம் கொடுக்கப்படாது. மனத்திற்கு புறம்பாக நீங்கள் நின்று ஆட்சி செய்யவேண்டும். அப்படி இல்லாது அதன் ஆட்சிக்கு உட்பட்டீர்களோ உங்களை அது அதோ கெதியில் தள்ளி விடுமென்பது நிச்சயம். இப்படி ஒழுங்குடனும், முறையாகவும் ஜபம் செய்துகொண்டு வந்தால் ஜபம் முற்றி தியானம் நிலைக்கும். தியானம் முற்றும் போது ஜபம் தானுகவே நின்று விடும். தியானம் கலையும்போது ஜபத்தின் உதவியால் மனதை நிலைநாட்டவும் இயலும். குறித்த நேரங்களில் ஜபம் செய்வதைத் தவிர வீண் பேச்சுகளுக்கும், அவசியமற்ற எண்ணங்களுக்கும் இடம் கொடாது மந்திரத்தை ஜபம் செய்யவேண்டும். அதனுல் கால கெதியில் பெரும் பயனை நீங்கள் அடைவீர்கள். இதன்பயனுக அனுவசியமான குழப்பமோ, கொந்தளிப்புக்களோ எப்போதும் உள்ளத்தில் நின்றுவிடும். ஜபத்தினுல் வேலைகளுக்கும் மற்றும் முக்கியமான அலுவல்களுக்கும் குந்தகம் ஏற்பட்டு விடுமோ வென்று சந்தேகப்படவேண்டியதில்லை. முன்னிலும் பார்க்க அவ் வேலைகளை நீங்கள் திறம்படசெய்வீர்கள். நாம ஜபத்தால் பல வழியிலும் சிதறிப்போன எண்ணங்கள் ஒன்று படுகின்றன. இந்த ஒன்று பட்ட மனதினுல் உங்கள் லௌகிக காரியங்களை இன்னும் சிறப்பாகவும், அற்புதமாகவும் செய்து முடிப்பீர்கள் என்பது திண்ணம். நாம ஜபத்தினுல் உங்கள் மனம் உறுதி அடைகின்றது. காமம், கோபம், குரோதம் முதலிய தீய அசுர குணங்கள் சாய்ந்து விடுகின்றன. மனதை பரிசுத்தப் படுத்துவதற்காகவேதான் நாம ஜபத்தைப் பழகுவது என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு உங்கள் உள்ளத்திலே யாதாயினும் ஒரு தீய எண்ணம் நுழையும்போது நாம ஜபத்தால் விரட்டவேண்டும். அப்படி இல்லாது சிறிது இடம் கொடுத்தால் அத்தீய எண்ணம் உங்களை செயலுக்குத் தூண்டி, அச்செயலிலிருந்து நீங்கள் விடுபடாத வண்ணம் நன்ருக ஆழ்த்திவிடும். எனவே நாம ஜபத்தை எப்பொழுதும் உங்

ஓம்

# அடியார் வழிபாடு

(சாது முருகதாஸ்)

உருவ வழிபாட்டால் சர்வ மொழிந்தின்பம்
அருவ வழிபாட்டால் அதுவே நாமாவோம்.

மனிதன் உண்கிருன், கேட்கிருன், பார்க்கிருன், நுகர்கிருன். இச் செய்கைகள் மூலம் பழக்கத்தால் நீக்கமுடியாத தன்மையாலும், அறியாமையாலும், பலகோடி பிழைகள் செய்கிருன். நியாய அநியாய வேற்றுமை தெரிந்தும் நன்மையை கடைப்பிடிக்காது மேலான தத்துவங்களைப் பேச்சில் மட்டும் கொண்டு தன்னையும் ஏமாற்றிக்கொண்டு பிறரையும் ஏமாற்றப்பார்க்கிருன்.

பேசப்புகுந்தால் பூரணத்தின் பெருமை
ஓர் நிமிடச் சொல்லாம்
நேசமுடன் பெற விரைந்தால்
நேரும் பல கோடி ஜென்மம்

மேலான தத்துவங்களை அனுபவத்தில் கொண்டு வர ஆணவம் முதலில் அழியவேண்டும். பார்க்கக்கூடாதவைகளைப்பார்த்தும் இந்திரியங்கள் வாயிலாக அழிந்து மறைந்து அல்லல் தரக்கூடிய அவனி விஷயங்களை ஆசையால் அனுபவித்தும் அதன் மூலம் உள்ளத்தில் பாய்ந்த அழுக்காகிய ஏமாற்றம் ஆணவமாகி காண்பவை எல்லாவற்றிலும் குற்றத்தையே காட்டுகிறது. இவ் அழுக்கு நீங்கினுலன்றி அப்பழம் தத்துவமாம் அமைதி காணக்கிடைக்காது.

---

முற்பக்கத் தொடர்ச்சி

கள் பாதுகாப்பாளராக நிறுத்தி விடுங்கள். அதுவே உங்களுக்குப் பெருந்துணை. கவலைக்கடல் கடக்கும் தோணி, திகைக்கும் மாலுமிக்கு கலங்கரை விளக்கு, ஆபத்துக்காலத்தில் உதவும் நண்பன், வழியினின்றும் விலகிய ஒருவனுக்கு வழிகாட்டும் ஆசான், பசித்த போது பரிந்து அமுதினை ஊட்டும் தாய், குற்றம் கண்டபோது இடித்துத் திருத்தும் தந்தை, தேவர்களுக்கும் கிட்டாத மூவா மருந்து.

சிறிய வாயினையுடைய ஓர் குடம். கைவிடமுடியாத அதன் வாயின் மூலம் எப்படியோ அழுக்கு வந்து சேர்ந்துவிட்டது. உறைந்து போன அவ்வழுக்கை நீக்கமுடியவில்லை. அழுக்கு நீங்கியபின் தான் குடத்தில் தண்ணீர் எடுத்து உண்ணவேண்டும். யோசித்துப் பயனில்லை. எதிரில் குழாயிலிருந்து தண்ணீர் கொட்டுகிறது. அத்தண்ணீருக்கு எதிராக குடத்தின் வாயைப் பொருத்தி வேகமாக திருப்பிவிட்டான் குழாயை. தண்ணீர் உள்ளே பாய்ந்தது. குடம் நிரம்பியது. தண்ணீர் வழிகிறது. வழியும் தண்ணீரில் உள்ளிருந்து அழுக்கு கரைந்து வெளிப்படுகிறது. சிறிது நேரத்தில் அழுக்கு முழுதும் போய்விட்டது. குடத்தை அலசி ஒரு முறை கொட்டி தண்ணீரை ஏந்தி உண்டு களித்தான். இதுபோல் ஜீவனானவன் ஆண்டவன் அருளால் பெற்ற தேகத்தில், இந்திரிய வாயிலாக புகுந்த அழுக்கை நீக்க முடியாது அவதி உறும்போது, சற்குரு நாதன் வந்து கருணையாம் இறைவனது வழிபாடாகிய பக்தியின் முன் நிறுத்தி அழுக்குப் புகக் காரணமாயிருந்த இந்திரியங்கள் மூலமாகவே இறைவனாம் கருணை வெள்ளத்தைப்பாய்ச்சி, ஆணவ அழுக்குச் சிறிது சிறிதாய் அகல, பின் தியாகம் என்ற சக்தியால் குலுக்கி, சேவையின் மூலம் உலகுக்கு பணி செய்ய வைத்து, ஜீவனை முழுவதும் அன்பனாக்கி, தான் அனுபவித்து, அவனையும் அனுபவிக்க, விடுகிறான்.

ஜீவன் என்பான் ஒரு தவசி—அவன்
பாபபுண்ணியத்தைப் பார்த்து அலசி
தேவன் தந்தானொரு தேகம்—அதைத்
தேவையில்லாச் செய்கையாலே நிரப்பி
கோபம் கர்வம் முதலிய—ஆணவ
கூட்டமாம் அழுக்கதில் சேர்த்து
பாபம் வளருதல் கண்டு—பதைத்து
பக்தன் போல பல சாதனை செய்து
மூவர் வணங்கும் அன்பினை—பாய்ச்சி
முற்றும் புனிதமாய்ச் செய்து சேவையில்
பாபமற்று தன்னைத் தந்து—பின்னர்
பாவ சமாதியில் நின்று இன்பம் பெற்றான்
தானே தானானே தானாய்—தானே
தானாய் நின்ற நிலையது வானான்



என்ற பாட்டின்படி பல செய்கைக்கும் காரணமாயுள்ள ஆணவ அழுக்கை அன்பினால் கழுவி, இந்திரியங்கள் வாயிலாக அன்பை மனதில் நிரப்பி, அழுக்கற்று, அமைதியில் வாழவேண்டும்.

உருவமற்ற ஒன்றை உணர உருவமே வழி என்பது உண்மை. மனிதனுடைய வழிபாடு முன்னேற முன்னேற சிறிது சிறிதாக அவன் பூரண நிலையை அடைந்து விடுவான், ஒருவன் நேராக பூரண நிலைக்குப் போய்விடமுடியாது. படிப்படியே சென்றாகவேண்டும், இக்காலத்திற்கு வழிபாட்டின் மூலமாகத்தான் மேலான நிலையை அடைய முடியும். (1) அன்பர் வழிபாடு. (2) ஆண்டவன் வழிபரடு. (3) அன்பு வழிபாடு, (4) பிரும்ம நிலை, அன்பர் வழிபாட்டால் அவனியில் நமக்குவேண்டிய தத்துவங்களும் நீதிகளும் உணரப்பட்டு அவர்கள் காட்டும் சகுண வடிவமான ஆண்டவனை வணங்கி அவன் அருளால் எங்கும் அவன் நிறைந்திருப்பதைக் கண்டு, அன்புமயமான அவனிக்குச் சேவைசெய்து அன்பையே தனக்கு லட்சியமாகவும் அவ் அன்பே எல்லா மத தெய்வங்களும் என்று உணர்ந்து, அவ் அன்பினுள் தன்னை இழந்து பூரண பிரமமாகலாம். இம்முறையே சாதகனுக்கும் மற்றும் அனைவர்க்கும் பொருந்தும்.

வெட்கத்தாலோ கௌரவத்தாலோ சாதனைகள் செய்யாமல் அன்பர்பணிசெய்யாமல் அன்பை உணர்வதோ அத்வைத நிலையாம். பிரமமாவதோ சொல்லளவில் இருக்குமேயன்றி அனுபவத்தில் இராது. அடியார்களுக்கு நமஸ்காரம், மற்றும் அவர்களுக்கு பணி செய்தல் நமக்கு அகௌரவமாகவும் அற்பமாகவும் தேவையற்றதாகவும் தோன்றுவது இயற்கை. இதுவே ஆணவத்தின் சொரூபங்களில் ஒன்று. நாம் அடியார்களை வணங்குவதால் அவர்கள் நம்மால் அன்பால் விலைக்கு வாங்கப்பட்டவர்களாகி தேவை அறிந்து வந்து அழுக்கு அறுத்து ஆண்டவனிடம் சேர்ப்பார்கள். இதை உணர்ந்த ஞானிகள் "ஓ பரம்பொருளே! உனை நான் அறியத்தகுதியற்றவனாயிருந்தால், எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும். அதாவது உன்னை உணர்ந்து உன் மயமாகவே வாழ்ந்து உலகில் பாமரர்போல் நடிக்கும் அன்பர்கள் ("ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி அனுபூதி அடைவித்ததொரு பார்வைக்காரா") என்னைப் பார்க்கும்படியும், நான் அவர்களுக்குத் தாசனாகி தொண்டு செய்யும் படியும் நீ செய்துவிட்டால், உன்னை அறியாமல் உன் நிலை எனக்கு அதுவாகவே வரும் என்பது உண்மை.

தொடரும்

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# சாதகர்க்குத் துணை.

சுவாமி ஸ்ரீ இராமதாஸ் அவர்களின் ஆங்கில நூல்களில் இருந்து திரட்டிய (Guide to Aspironts) என்னும் நூலின் மொழிபெயர்ப்பு.

(மொழிபெயர்ப்பு—விசாகர்,)

## சமயம் அனுபவப் பொருள்.

உன்னுடைய உற்பத்திக்கும் உலகினுடைய உற்பத்திக்கும் உரிய இடத்தின் பாதை புறத்தே இல்லை. நீ உன் உள்ளே செல்ல வேண்டும். உன்னுடைய புலன்களையும் மனத்தையும் புத்தியையும் தாண்டிச் செல்லவேண்டும். உன்னுடைய எண்ணங்கட்கும் லட்சியங்கட்கும் அப்பாற் செல்லவேண்டும். சகல எல்லைகட்கும் நிபந்தனைகட்கும் நுகர்ச்சிகட்கும் மேலே செல்லவேண்டும். அப்போதுதான் உன்னுடைய அழிவிலா மூலப்பொருளின் முழுக் காட்சியையும் அனுபவத்தையும் பெறுவாய். காணக்கூடியதும் காணக்கூடாததுமான உலகங்கட்கும் அவற்றில் வாழும் சகல ஜீவ ராசிகட்கும் மூலப்பொருளாய் உள்ளதும் இந்த அழிவிலா மூலப் பொருளே.

சமயம் என்பது அனுபவப்பொருள். ஒருகோவிலின் அல்லது நெறியின் அல்லது வகுப்பின் அங்கத்தவனாய் இருப்பதால் இவ்வனுபவத்திற்கு உரிமையாக முடியாது. வேத நூல்களையும் புனித நூல்களையும் எவ்வளவுதான் வாசித்தபோதிலும் இவ்வனுபவத்தைப் பெறமுடியாது. கர்மானுஷ்டானங்களினாலும் சடங்குகளினாலும் வழிபாடுகளினாலும் இவ்வனுபவத்திற்கு வரமுடியாது சுயமுயற்சியையும் உழைப்பையும் பொறுத்தே ஆத்மானுபவம் உள்ளது. விடுதலைக்கும் சாந்தத்திற்கும் தனது உள் உழைப்பிலே தான் உண்மைச் சமயானுஷ்டானி கவனமாயிருப்பான்.

உறுதியும் ஊக்கமும் திண்ணிய முயற்சியும் உழைப்புமே சாதகனைக் கடவுளுணர்விற்கு இட்டுச்செல்லும். மனிதன் புலனின்பத்தை விரும்பித்திரியும்வரை அவனது முன்னேற்றம் தாமதமாயும் பிழையுள்ளதாயுமே இருக்கும். அவன் தனது முயற்சியில் தீரமாயும் நோக்கத்தில் உறுதியாயும் இருத்தல் வேண்டும். தனது உள்ளத்திலும் மனத்திலும் படிந்திருக்கும் தீய ஆசைகளை அடக்கி

# கதிர்காம க்ஷேத்திர மகிமை.

(குல. சபாநாதன்)

[இந்தப் புராதன க்ஷேத்திரத்தைப் பற்றிய முழுவரலாற்றையும் திரு. குல. சபாநாதன் அவர்கள் இயற்றிய 'கதிர் காமம்' என்னும் நூலிற் காணலாம் —ஆசிரியர்.]

எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவான இறைவனை வழிபடுவதற்குப் பல சமயங்களும் பல படிகளாயமைந்திருப்பதைப்போல பல சமயத்தவர்களும் வழிபடும் தெய்வத்தன்மை வாய்ந்து விளங்கும் திருத்தலம் திருக்கதிர்காமமாகும்.

இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து பௌத்தர்களும் இந்துக்களும் முஸ்லீம்களும் இத்தலத்தைத் தரிசிக்கின்றனர். கதிர்காமக் கந்தனை வழிபடும் சைவர்கள் காட்டும் அன்பும் ஊக்கமும் அளவிடற்கரியன, புத்தர் பகவான் யோகத்தமர்ந்த திருத்தலங்கள் பதினாறனுட் கதிர்காமமும் ஒன்றாகக் கி. மு. 300க்கு முன்பே கருதப்பட்டு வந்தது. சிங்களவரசருட் பெரும்பாலார் கதிர்காம தெய்யோவையும் (கதிர்காமக் கடவுள்) பத்தினி தெய்யோவையும் (கண்ணகியம்மன்) வணங்கிவந்தனர் என்பது சரித்திர நூல்களால் நன்கு பெறப்படும். சிங்களரின் தலை நகராயிருந்த கண்டி நகரி

---

முற்பக்கத் தொடர்ச்சி.

அழிக்க அவன் எல்லா வகையிலும் முயற்சிக்கவேண்டும். சுத்தப்படுத்திய ஒளியுள்ள புத்திதான் விண்ணரசிற்குட் செல்லும் உரிமையைச் சாதகனுக்குத் தரக்கூடியது.

வெளிச்செல்லும் மனத்தை உள்முகப்படுத்துவதே முக்கியமாகத்தேவை. அமைதி இல்லாது அலைந்து திரியும் சுபாவமுள்ள மனதைச் சரியான தியானத்தினாலும் முற்றாக அடக்கவேண்டும். மனம் நிலைத்து அதன் அடங்காச் சக்திகளெல்லாம் அடிமையாக்கப்படவேண்டும், உண்மைப்பொருளின் நாட்டமுடைய சாதகனுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொண்ட முயற்சியே வேண்டிய குணங்கள். களைப்பு, சோம்பல் கவலையீனம் இவைகள் ஆன்மவளர்ச்சியின் சத்துராதிகள். விழிப்பு கவனம் முயற்சி இவை சாதகனின் உண்மைக்குணங்கள்.

தொடரும்.

னும் இத்தெய்வங்கட்குக் கோயில்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். கண்டியில் வருடந்தோறும் "பெரஹரா" என்னும் விழாவிற் கதிர்காமக்கடவுளுக்கு முதன்மை கொடுக்கப்பட்டுவந்தது.

இனி, ஹிலூர் அலைஹி எனும் முகம்மதிய அடியார் கதிர்காமத்தை அடைந்து ஞானம் பெற்றுய்ந்தாரென்பதும் சிலகாலம் அங்கே தொண்டாற்றும் நோக்குடன் தங்கினார் என்பதும் ஐதிகம். இவ்வடியார் சமந்த கூடத்திலும் சிறிதுகாலம் வசித்தாரென்றும் சொல்லப்படுகிறது. கதிர்காமத்தில் முஸ்லிம் பெரியார் ஒருவர் அடங்கிய இடமொன்று வள்ளியம்மன் கோயிலுக்கருகில் இன்றும் காணப்படுகிறது. பண்டைக்காலந்தொட்டுக் கதிர்காமத்தில் நடக்குந் திருவிழாக்களில் முகம்மதியர் விளக்குப் பந்தம் பிடிக்கும் வழக்கமொன்றுண்டெனச் சைமன் காசிச்செட்டியாரவர்கள் 'சிலோன் கசெற்றியர்' என்னும் நூலிற் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது இவ்வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. முருகனுக்குரிய சிறந்த திருத்தலங்களில் முகமதியரின் தொடர்பிருத்தல் ஊன்றி விளக்கத்தக்கது.

திருக்கதிர்காமத்தில் முருகப்பெருமான் சிறியதொரு கோயிலில் திரைமறைவிற்றான் வீற்றிருக்கின்றார். திரைமறைவில் வீற்றிருந்தும் திசையனைத்தும் ஆள்கின்றார் எனப் போற்றத்தொடங்கினார் முருகதாசர் ஒருவர். கதிர்காமத்திற்குச் செல்வோர் கோபுரத்தின் அழகைக்கண்டு வியத்தற்கேனும், கர்ப்பூர தீபத்தின் ஒளியைக் கண்டு மயங்குதற்கேனும், அங்குள்ள கடைவரிசையைக் கண்டு களித்தற்கேனும் போவதில்லை. அங்ஙனமாயின் வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் செல்வதற்குரிய காரணந்தான் என்னை? கலியுக வரதனாகிய கதிர்காமப்பெருமான் வள்ளிநாச்சியாருடன் வீற்றிருந்து கண்கண்ட கடவுளாக அடியார்கட்குத் திருவருள் பொழிதலினால் என்க. எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றபோதிலும், இத்தலத்திலுள்ள திருவருட் சக்தியானது காந்த சக்தி இரும்பை இழுப்பதையொப்ப, அடியார்களைத் தன்னகத்தே இழுத்து உருக்கி விடுகின்றது. இத்தலத்தின் சக்திப்பிரவாகத்தை உணர்தல் கூடுமன்றி, சொற்களால் விரித்தல் எம்போன்றார்க்கு எளிதன்று. அன்பர்களே! நீங்கள் ஒருமுறை போய்ப்பாருங்கள். மாணிக்ககங்கையிற் படிந்தாடுங்கள். பக்தி வெள்ளத்தில் பரவசமுற்று ஆனந்தக்கூத்தாடி 'அரோஹரா' என்னும் நாமத்தைச் சொல்லிப்பாருங்கள்.

---

# கதிர்காம யாத்திரை.

(முத்து)

கதிர்காமம் என்பது இலங்கைத்தீவில் திருப்புகழ்பெற்ற ஒரு சுப்பிரமணிய முக்கிய ஸ்தலம். யாத்திரை என்றால் கடலேறிச் செல்லும் பயணம், கூத்து, திருவிழா, நடத்தல் பிரயாணம், வழக்கம் என்ற பொருள்படும். ஆடிமாசத்து அமாவாசி தொடக்கம் பூரணை ஈறாக உள்ள பதினைந்து நாட்களும் கதிர்காமத்தில் நடக்கும் விழாவைப்பார்க்க அன்பர் செய்யும் பிரயாணமே கதிர்காம யாத்திரை என்று சுருக்கமாகக் கூறலாம்.

இதற்கு இன்னுமோர் தத்துவக் கருத்துக் கூறுவர் ஆன்றோர். கதிர் என்பது ஒளி. காமம் என்பது விருப்பம். கதிர்காமம் என்றால் யாத்திரீகர்களது விருப்பத்தை ஒளிரூபமாக நின்றுநிறைவேற்றுபவன் என்பது பொருள். யோகிகளின் யோகசாஸ்திரப்படி சகஸ்ராரமே கதிர்காமமாகும். ஆண்டவனைத் தியானிக்கும் ஆதாரநிலையங்கள் ஆறு உள்ளனவென்று யோகசாஸ்திரம் கூறுகின்றது. அவை மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி, ஆக்ஞை என்பன.

இந்த ஆறு இடங்களிலும் முருகன் ஆறுமுகமாகத் தனித்தனி முகம்கொண்டு விளங்குகிறான். ஏழாம் இடமாகிய ஸகஸ்ராரத்தில் ஒளிப்பிளம்பாக விளங்குகிறான். ஆறும் இடமாகிய புருவ நடுவில் விளங்கும் ஆக்ஞையில் அறுகோணமுடைய ஒளிமணி ஒன்று உண்டு. அதுவே ஆறுமுகம் நிறைவுபெற்ற இடமாகும். அதற்குமேலே உள்ள சகஸ்ராரத்தில் ஆயிரம் இதழ்களோடு ஒளிப்பிளம்பாகக் காட்சி அளிக்கிறான் முருகன். அதுவே கதிர்காமமுமாகும்.

உலகில் மண் தோன்றுவதற்குமுன்பே மலை தோன்றியது என ஆராச்சியாளர் கூறுகின்றனர். ஐவகை நிலத்தில் முதலிற் தோன்றியது குறிஞ்சியே. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன். முதலிற்றோன்றிய நிலத்தில் இறைவனுக்கு முதலில் ஏற்பட்ட நாமம் முருகன் என்பது. இம்முருகெனும் சொல்லு வாசனை, அழகு, இறைத்தன்மை என்னும் பரந்த பொருள்களையடக்கியதாய்த் தனித்த

லைமை பெற்று விளங்குகிறது. இவை குறித்தே பாரதநாட்டில் முருகனுக்கு ஆறுபடை வீடுகள் அமைந்துள்ளன. அவை;— திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை, என்பனவாம். இவ்வாறு இடங்களிலும் மலையுச்சியிலே முருகன் கோயிலுண்டு.

இந்த ஆறு இடங்களுமே எம் உடம்பிலுள்ள ஆறு ஆதார நிலையங்களுமாம். ஏழாம் இடமே கதிர்காமமாகிய ஸகஸ்ராரமாம். முருகன் சூரபத்மனைக் கொல்வதற்கு மேற்குறித்த ஆறுபடைவீடுகளை உபயோகித்தானாயினும் சூரனைச் சம்காரம் செய்த இடம் கதிர்காமமே. கோயிலுக்கு அணித்தேயுள்ள சூரன் கோட்டையும் செல்வக்கதிர்காமம் செல்லும் வழியிலுள்ள வள்ளியின் குகைகளும் சான்றாகும். ஆத்மனாகிய முருகனும் ஆணவ அசுரனை வெல்வதற்கு ஆதார நிலையங்கள் ஆறிலும் இருந்துகொண்டே போராடுகிறான். ஏழாம் இடத்தில் தியானம் நிலைத்துவிட்டால் ஆணவ அசுரன் தானே மடிந்து நசித்துப்போகிறான். இலக்கினத்திற்கு 7ம் இடத்தைச் சோதிடர்கள் 'காமம்' என்பார்கள். ஆதார நிலையத்தில் ஏழாம் இடமும் கதிர்காமமாயிருத்தல் சாலப் பொருத்தமானதே. இதுவே கதிர்காமத்தின் இரகசியமாகும்.

இன்னும் கதிர்காம ஸ்தலத்தில் கோயிலினுள்ளே திரைகள் கட்டப்பட்டிருப்பதை அன்பர்கள் பார்த்திருப்பர். அங்கு ஏழு திரைகள் கட்டப்பட்டிருப்பதாகச் சில அன்பர்கள் கூறுகிறார்கள். ஏழு திரைகள் என்பது உண்மையாயின் அத்திரையின் தத்துவமும் இதுவேயாகும்.

வடக்கே கைலாய யாத்திரை எவ்வளவு முக்கியமானதோ தெற்கே கதிர்காம யாத்திரை அவ்வளவு முக்கியமானதாகும். முன்னே கயிலாயம் செல்பவர்கள் தமது வாழ்வில் கடைசியாத்திரையாகவே கொண்டார்கள். ஏனெனில் பாதை அவ்வளவு கடினமானது. செல்லும் யாத்திரிகர்களில் பெரும்பான்மையோர் திரும்பிவரும் வழக்கமில்லை. நாவுக்கரசரே கைலாய யாத்திரைக்கேற்ற உடம்பின்மையால் கயிலையின் காட்சி திருவையாற்றில் பெற வேண்டிவந்தது.

இதே போலத்தான் அக்காலத்தில் கதிர்காமம் யாத்திரை செய்பவர்கள் போய்வருவதாயிருந்தால் ஆறுமாசமோ ஒருவருடமோ



செல்லும். வீட்டிலுள்ள பந்தங்கள் ஊரளவில் அற்றோரே யாத்திரை கிளம்புவதுண்டு. அக்காலத்தில் தற்காலத்தைப்போன்ற பிரயாணவசதிகள் கிடையவே கிடையாது. கூட்டம் கூட்டமாகக் கால்நடையிலேதான் செல்வார்கள். வீட்டிலிருந்து போகும்போதே வந்தாற் கண்டுகொள்ளுங்கள் என்றுசொல்லிவிட்டுத்தான் புறப்படுவார்கள். கதிர்காமம் செல்பவர்கள் சில நாளைக்காயினும் இடைவிடாது முருகனைத் தியானித்து கனவிலோ நனவிலோ அவனருள் பெற்றே அக்காலத்தில் கதிர்காம யாத்திரை நடந்தது. ஒருவர் யாத்திரை சென்று திரும்பிவிட்டால் அந்த மாசம் முழுவதும் அந்த ஊரிலுள்ள அயலூரிலுள்ள அன்பர்கள் வந்து கந்தனின் பிரதிநிதியாக நினைந்து தரிசனை செய்து விபூதிவாங்கிச் செல்வார்கள். கந்தனுடைய சுகம்பற்றியும் அவனிடம் நான் சொன்னதைச் சொன்னீர்களோ என்பன பற்றியும் அவர்களுக்கிடையில் நடக்கும் சம்பாஷணை பக்தியின் உச்சநிலையைக் காட்டுவதாகும்.

வாகன வசதிகள் ஏற்பட்டதன் பின்பும் திசைமகாராவிலிருந்து பன்னிரண்டு மைல் தூரம் அன்பர்கள் நடந்தே சென்றனர். அந்தப் பன்னிரண்டு மைல் தூரமும் நடக்கும்போது மனிதனிடத்துள்ள ஆணவமெல்லாம் அற்று வீட்டு நினைவுகள் மறந்து கந்தன் நினைவே உள்ளத்தில் பதிகிறது. சாதி சமயம் அற்று எல்லோரும் "சாமி" என்ற ஒரே சொல்லால் அழைக்கப்படுகின்றனர் (வடநாட்டில் சாமி என்றால் முருகன் என்பது அர்த்தம்) அரோகரா என்னும் சொல்லே யாவர் நாவிலும் தாரக மந்திரம். யாத்திரிகர்கள் மாணிக்க கங்கையில் இறங்கி அக்கரை ஏறியதும் தாங்கள் கொண்டுவந்த ஏதோ ஒன்றைத்தவறவிட்டுவிட்டதாகவோ அன்றி ஏதோ பாரம் குறைந்துவிட்டதாகவோ உணர்கின்றனர். கங்கையில் இறங்கியதும் பாபங்களெல்லாம் பயந்து பக்கத்து மரங்களிலே தொத்திக்கொள்ளுகின்றன. யாத்திரிகர்கள் திரும்பும் பொழுது அந்தப் பாபங்கள் அவர்களை மறுபடியும் வந்து அடைகின்றன போலும். திசைமகாரமா வந்ததும் பழைய நினைவுகள் வந்துவிடுகின்றன. கோயிலடியில் காணப்பெற்ற சமரசம் திசைமகாரமாவுக்கு இப்பால் காணப்படுவதில்லை. இதுவும் கதிர்காமத்தின் ஓர் அற்புதமே.

யாத்திரிகர்களில் இன்னும் உற்சாகமான முயற்சியுள்ளவர்கள் கதிரமலை ஏறுவது வழக்கம். மலையினுச்சியில் இயற்கை

# வேதாந்த தத்துவ விளக்கம்.

## குரு—சீட குணலக்கணங்கள்.

(சிவநேசன்)

குரு, சீடன் என்ற பதங்கள் இன்று சம்பாஷணைகளிலும், பேச்சுக்களிலும், கட்டுரைகளிலும் சர்வசாதாரணமாய் வழங்கப் படுகின்றன. பலர் 'குரு' என்ற பதத்தின் கருத்தையே அறியாமல் அதைப் பாவிக்கிறார்களெனலாம். வேதாந்த சாஸ்திரங்களில் இவ்விரண்டையும் பற்றியுள்ள கருத்துக்களைச் சிறிது ஆராய்வோம்.

உண்மையான ஆத்மீக வாழ்வில் கீழ்க்கண்ட நான்கு சாதனங்களை உடையவனே அதிகாரியாகிறான்:—

(1) நித்தியா நித்திய வஸ்து விவேகம்: ஆன்மாவே அழியாத நித்தியப் பொருள், அதனால் அறியப்படும் ஏனைய பொருள்களனைத்தும் அநித்தியம் என்ற விவேகம்;

(2) இகபரபோக விராகம்: இம்மையிலும் மறுமையிலும் அனுபவிக்கக்கூடிய விடயப் பொருள்களின் அழியுந் தன்மையை உணர்ந்து, அவற்றின்மீது பற்றுநீங்குதல்;

---

முற்பக்கத்தொடர்ச்சி.

அழகோடுகூடிய அமைதி தென்படுகிறது. அதுதான் எம்மிடத்துள்ள துரிய மலையென்றால் பிழையாகாது, உடல் நினைவோடு யாத்திரைசெய்யும் உலகோர் உயிர் நினைவோடு யாத்திரை செய்யவும்பழகிவிட்டாரானால் ஒவ்வொருவரதும் திருவடியாத்திரையே கடினமாகத்தோன்றாது.

கற்றவர் உளத்தினில் களிகொண்டு நடம் புரியும்
கதிர்காமத் தெய்வமே
உற்றபோ தடியேன் உளத்தினில் உன்றன் பாதம்
வைத்தருள் வாயென்றே
சற்றேனும் சிந்தைக் கிலேச மின்றிச் சந்ததமு
முன்றனு மமேயோதி
பற்றொன் றிலாது பணிபுரியும் செயலைப் பணிவுடன்
பார்த்து நிற்கின்றேன்.

---



(3) சமாதி சட்கசம்பத்தி: சமம், தமம், திதிக்ஷை, உபரதி, சிரத்தை சமாதி ஆகிய ஆறுகுணங்கள். காமக்குரோதாதிகளையடக்கி வாழ்தல் சமமாகும்; இது உட்கரண அடக்கமாகும். ஞானேந்திரியங்களையும் கர்மேந்திரியங்களையும் விடயப்பராக்கிற் செல்லாது அடக்கல், அதாவது புறக்கரண அடக்கம் தமமாகும். காமாதிகளை மேலெழவிடாது, தணித்தல் திதிக்ஷையாகும். சரியை, கிரியை, யோகமாகிய மூன்றின் சேஷ்டைகளைச் சுமையெனக்கண்டு விடுதல் உபரதியாகும். குருவிலும் சுருதியிலும் வைக்கும் நம்பிக்கையும் விசுவாசமும் சிரத்தையாகும். குருவின் உபதேசத்தை ஐயமின்றி மனதிற் பொருந்தக்கொள்ளல் சமாதியென அழைக்கப்படும்;

(4) முமுட்சுத்வம்: முத்திவிருப்பு, அதாவது பிறப்பிறப்பில்லா நிலையில் விருப்பம்.

ஆசிரியர்கள் பலவகுப்பினர், அவர்களைக் கீழ்க்கண்ட முறையில் எட்டுவகையாகப் பிரிக்கலாம்;—

(1) போதகாசிரியர்: சமய சாஸ்திரங்களின் கருத்தைச் சீடனின் ஐயந்திரிபற விளக்குவோர்.

(2) வேதகாசிரியர்: உண்மை ஞானத்தை விளக்குவோர்.

(3) நிஷிதகுரு: வசியம், மோகனம், ஸ்தம்பனம், ஆகருஷ்ணம், உச்சாடனம், வித்துவேஷணம், பேதனம், மாரணம், ஆகிய எட்டுக்கருமங்களால் இம்மைக்கு இன்பங்கொடுப்பவர். ரஸவாதமும் எல்லாச்சித்திகளும் 'பேதனம்' என்பதில் அடங்கும்.

(4) காமியகுரு: அறநெறியைப் போதித்து இம்மை மறுமை இரண்டிலும் இன்பம் அருளுவோர்.

(5) சூசனகுரு: தம்மிடம் சரண்புகுந்தோர்க்கு, சமம், தமமுதலாய், மேலே பிரித்துள்ள, ஆறுகுணங்களை ஒருங்கே வரச் செய்பவர்

(6) வாசககுரு: விடயமனைத்தும் பொய்யெனக்காட்டி, ஆன்மசைதன்னியத்தில் அபேட்சை உண்டாக்குவோர்.

[7] காரககுரு: சிவ—சீவ ஐக்கிய ஞானத்தை வழங்குபவர்.

(8) விகிதகுரு: முத்தியருள்பவர்.

இந்த எண்மருள் பெரும்பாலான மக்கள் தேடி ஓடுவதும் அடைவதும் நிஷிதகுருவையும், காமியகுருவையுமே என்பதை யாம் குறிப்பிடாமலே வாசகர்கள் அறியக்கூடும். (தொடரும்)

# — ஆத்ம ஜோதி. —

(ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி)

'ஆத்மஜோதி' என்பதன் பொருள் ஞானச் சுடர் விளக்கின் துணைகொண்டு முத்தியடையத் தேவையான ஆத்மாவின் உண்மை நிலையைத் தெளிந்தறிவதேயாம். நாரணர்க்கு ஞானச்சுடர் விளக்கேற்றிய பூதத்தாழ்வார், கையாண்ட மூன்று சாதனங்கள் அன்பு, ஆர்வம், சிந்தை என்பவையே. அண்ணாமலையில் அகண்ட தீபம் ஏற்றுவதன் உள்கருத்தும், கார்த்திகை மாதத்தில் வீடுகளில் வரிசைவிளக்குகள் ஏற்றுவதன் நோக்கமும், ஆத்ம ஞானத்தின் உதவியால் ஆண்டவனது சொரூபத்தை மனக்கண்ணில் தோன்றச்செய்து சாயுஜ்யமடைவதேயாம். கார்த்திகை தீபத்தன்று, இவ்விதமாக ஞானச்சுடரை ஆடவர்க்கும், சிறுவர் சிறுமிபர்கட்கும் பிரகாசனம் செய்து பக்தி சிரத்தையுடன் அலங்காரமாக தீபமேற்றுபவர் நம் சகோதரிகளேயன்றோ? இவ்விசேஷ நிகழ்ச்சியினின்றும் விளங்கும் பெரிய உண்மை, நம்மக்களுள் ஸ்திரிகளே நல்வழிக்கு வெளிச்சங்காட்டி ஆடவர்களையும் நல்வழிப்படுத்த வல்லவர்கள் என்பது. உண்மை ரகசியத்தை அறியாமலே தொன்று தொட்டு வாலாயமாய் வழங்கிவரும் பழக்கத்தைப் பல சகோதரிகள் அனுஷ்டித்தாலும், அப்பழக்கத்தின் அனுஷ்டானத்தால் அரும்பும் நலன் அனைவருக்கும் உரித்தானதே. ஸ்திரிகளின் உள்ளன்பும் ஆர்வமும் ஆடவர்க்கு எளிதில் கிடைக்கும் திரவியங்களாயிருப்பதால் அவர்கள் அவற்றின் விசேஷப் பெருமையைத் தக்கவாறு மதிப்பதில்லை.

ஆனால் மெய்யன்பு (உள்ளன்பு) என்ற அதிசய வஸ்துவிற்குரிய விசேஷணங்கள் பல. அவற்றை எடுத்துக்காட்டுதல் இக்கட்டுரையின் நோக்கம். [சுடர்] வெளிச்சம் என்பது குணவாசகமான பண்பு. ஒரு திரிபுஜக்கண்ணாடியின் வழியே புகுத்தப்பெறும் வெளிச்சத்தின் கிரணம், அக்கிரணத்தின் வெவ்வேறு ஏழு நிறத் தொகுதியாகப் பிரித்துக்காட்டப்படுகிறதல்லவா? ஊதா, ஆழ்ந்த நீலம், வானநீலம், பச்சை, மஞ்சள், செம்பீதப் பொன்னிறம், சிவப்பு, ஆகிய ஏழுநிறங்களும் ஒருமிக்கச் சேர்ந்தால் பிரகாசமுள்ள நிறமற்ற, சுயம் பிரகாசச் சுடர்க்கிரணமாகிறது. அதேபோல், மெய்யன்பு என்கிற மானசீகமான பண்பை ஈசுவரப்பிரேமையா



கிய கண்ணாடிவழியே புகுத்தினால் ஏழு விசேஷக் குணாதிசயங்களால்ஆக்கப்பெற்றது என்பது தெளிவாக விளங்கும். அவற்றை ஒவ்வொன்றாகப்பிரித்து ஆராய்வோம்;—

முதலாவது: அமைதியுடன் கூடிய பொறுமை. இவ்வரிய பெருங்குணம் தனித்து ஏகாந்தமாகக் குடும்பவாழ்க்கை நடத்துவோர்க்கு ஏற்படுவது சிரமம். அமளி, பொறாமை, பாபம், ஆத்திரம் பொச்சரிப்பு, அசூயை நிறைந்த இவ்வுலகத்தின் சந்தடிக் குழப்பத்துக்கிடையில் புகுந்து நசுக்குற்று அடிபட்டு, கஷ்டங்கள் அனுபவித்தால்மட்டில், பொறுமை, அமைதி, பிறரிடம் வெறுப்பின்மை, பச்சாத்தாபம் இவை உண்டாகும். தன் தாய், பிள்ளைகளுடன் சௌஜன்யமாகவும், அந்நியோந்நியமாகவும் வாழ்வதில் கஷ்டமேயில்லை. நமது மனப்பாங்குக்கு எதிரிடையான துறைகளிலேயே வாழ்க்கை நடத்திவரும் அந்நியர்களுடனும், இயற்கையில் அருவருப்புண்டாக்கும்படியான கெட்ட ஒழுக்கமுள்ளவர்களுடனும் கூடிப் பழகிப் பொறுமையிழக்காமல் அவ்வேறுபட்ட மனப்பாங்குள்ளவர்களை நல்வழியில் நடக்கச்செய்வதே மெய்யன்பின் முதற்சாதனமான பொறுமைக்கு அடையாளம்.

இரண்டாவது: உபகாரசிந்தையுடன் கூடிய தயை. ஹிந்துமதக்கோட்பாடுகளுக்குள் தயை முதன்மைத்து. பகவானுக்குத் தயாபரன். தயாநிதி என்ற நாமங்களைச்சூட்டி யருச்சிக்கிறோமல்லவா? தாகத்திற்கு ஜலம் தருதல். பசிக்கு அன்னமிடுதல் முதற்கொண்டு கீழே நழுவவிட்டுவிட்ட சிறு கைக்குட்டையைக் குனிந்தெடுத்து உடையவனிடம் தருதல் உள்பட, தினந்தோறும் நாம் புரியும் சிறு சேவைகளும் தயையின்பாற்பட்டவைதானே. தயையுள்ளவர் சிறிதும் காரமான வார்த்தைகளைப் புகலமாட்டார். உபசரணையே நோக்கமாயிருப்பர். தாராளமனசும், உதாரகுணமும் ஓங்கிவிளங்குவர். இன்னும் அசூயை, (பொறாமை) அவர்களிடம் நெருங்கவே நெருங்காது. வெகு தாழ்வான சித்தவிகாரங்களுள் அதிகேவலமானது அசூயை. கோபங்கொள்பவர் ஏதாவது காரணம்பற்றிக் கோபித்ததாக சால்ஜாப்பு சொல்லலாம். இஷ்டபோகத்தை நாடிச் சிற்றின்பப்பிரியன் மனக்கிளர்ச்சிகொள்வது சகஜம். ஆனால் அசூயை கொள்வதற்கு எவ்வித முகாந்தரமும் காட்டமுடியாது. அசூயை, எரிச்சல் இரண்டும் இரு கொடிய பிசாசுகள். அவைகளிடம் அகப்பட்டுக்கொள்ளாது தப்பி நல்வாழ்வு வாழ்தல் அவசியம்.

மூன்றாவது: அடக்கமும் பணிவும். மெய்யன்புள்ளவர் தமது அன்பை டம்பமாக வெளிப்படுத்துவதில்லை. மெய்யன்புள்ளவர் பகிரங்கமாய்ப் பலபேர்களுக்கும் தெரியவேண்டுமென்ற எண்ணத்துடன் எதையும் செய்யார். உள்ளன்புக்கு தற்பெருமை பாராட்டவே தெரியாது. பணிவு, அடக்கம் இரண்டும் அன்பின் அருமைக்குழந்தைகள், தற்புகழ்ச்சி பாபந்தரும். பாபச்செயல்களை முற்றிலும் நீக்கிப் பணிவுடன் சகோதர சகோதரிகளை நேசிப்பதே மெய்யன்பு.

நான்காவது: மரியாதையுடன் கூடிய விநயம். அநாகரிகமானதும் தகாததும், மரியாதையற்றதும், அசங்கியமானதுமான காரியங்கள் எதையும் சிந்திக்கமாட்டார் மெய்யன்பர். மெய்யன்புண்டானால்மட்டில் எவரும் பெருமையுடன் வாழ்வது எளிது. முட்டாள்பட்டம் என்றும் யாராலும் கிட்டாது. விநயம் பெரிய மனிதரது குலவிருதாகும்.

ஐந்தாவது: சுயநலங்கருதாமை. (ஸ்வானுராகம்) மமதை என்பது நம்மைக் கொடியநரகத்தில் தள்ளக்கூடியது, "எனக்கு முன்கோபம் அதிகம்; எனக்கு வெடுவெடுப்பு சுபாவம்" என்று சிலர் பெருமையாகச் சொல்வதை நாம் கேட்கிறோம். சுயநலமே கருதுபவர்கள்தான் இவ்விதம் சொல்பவர். சாந்தகுணம் நல்ல சுபாவம் உள்ளவர்க்கு வெடுவெடுப்பு, தன்னலப்பிரியம், கோபம் இவை பகிஷ்காரமானவை.

ஆறாவது: கபடமின்மை. உள்ளொன்றும் புறமொன்றும் நினைத்துப்பேசாது. தீமைபுரிதல் என்பதைக் கனவிலும் நினையாது கோட்சொல்லுதலையும், குண்டுணிகளையும் வெறுத்துத்தள்ளி, உண்மையேபேசி உயிர்வாழ்பவர்களே உள்ளன்புடையவர். ஆத்மஜோதியைக் கண்டவர்.

ஏழாவது: நேர்மை நிரம்பிய சத்தியம். பிறருடைய துரதிஷ்டம், துன்பம், தவறுகளைக்கண்டு களிப்படைவது மகாபாவம் மனிதர்களிடமும்சரி, மதஸ்தாபனங்களிடமும்சரி பொதுவாய் உலகத்திலேயும்சரி காணப்படும் ஒழுக்கவீனம், குணக்குறைவு, இரண்டகம், இவைகளைக்கண்டு உள்ளங்களிப்பது அவிவிவேகிகள்

[கவர் உள்பக்கத்தில் பார்க்கவும்]

# திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணி.

இத்திருப்பணிச்சபை செய்துவரும் தொண்டுக்கு ஆதரவளிக்க அநுராதபுரம் விவேகானந்தர் சபை மண்டபத்தில் திரு. T. சிவராமலிங்கம் அவர்களின் தலைமையில் ஓர் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. அத்தருணம் திருவாளர்கள் S. நடராசா, க. இராமச்சந்திரன், ஸ்ரீமதி. மகேஸ்வரி மகாதேவா, திருவாளர்கள் வி. க, செல்லையா, S. வைரவிப்பிள்ளை, பண்டிதர் M. ஆறுமுகம் முதலியோர் திருக்கேதீஸ்வரத்தலத்தின் பழமையும் மகிமையும் குறித்தும் அதின் புனருத்தாரண வேலையில் சைவர்களுக்குப் பொறுப்பாயுள்ள கடமையைப்பற்றியும் பேசினர். திரு. S. நடராசா அவர்களைத் தலைவராய்க்கொண்ட ஓர் நிர்வாகசபை நியமிக்கப்பட்டது.

நிகழும் ஆடிமாசம் பத்தாந்தேதி (25-7-49) ஆடிஅமாவாசைத் தீர்த்தமும், பதினேராந்தேதி (1-8-49) சுந்தரமூர்த்திநாயனர் குருபூசையும் இத்திருப்பதியில் நடைபெறும். புதைபொருளாராய்ச்சியாளரின் வேலையும் இவ்விருபுனிததினங்களுள் ஒன்றில் ஆரம்பிக்கப்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## திருப்பணி நிதிக்கணக்கு.

| | | | |
|---|---|---|---|
| | | சென்ற மாச வெளியீட்டின் மொத்தம் | 16748-00 |
| 19 | திரு, | S. சோமசுந்தரம் அவர்கள் | 1001-00 |
| 20 | ,, | டக்றர் A. கந்தையா அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 21 | ,, | C. குமாரசுவாமி அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 22 | ,, | G.G.பொன்னம்பலம் அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 23 | ,, | C. சுந்தரலிங்கம் அவர்களும் பாரியாரும் | 1050-00 |
| 24 | ,, | A, தையல்பாகர் அவர்களும் பாரியாரும் | 500-00 |
| 25 | ,, | செல்லமுத்து சோமசுந்தரம் அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 26 | ,, | J. தியாகராஜா அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 27 | ,, | S. குகப்பிரசாதம் அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 28 | ,, | S K. மாணிக்கம் அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 29 | ,, | S. இராசரத்னம் அவர்கள் | 100-00 |
| 30 | ,, | S. சரவணமுத்து அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 31 | ,, | மு. கனகரத்தினம் அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 32 | ,, | V. கனகலிங்கம் அவர்களும் புத்திரர்களும் | 1001-00 |
| | | | 29409-00 |

| | | |
|---|---|---|
| | முற்பக்கப்படி | 29409-00 |
| 33 | திருவாளர்கள் K. மதியாபரணம் அவர்களும் T. சண்முகநாதன் அவர்களும் | 1001-00 |
| 34 | திரு. P. ரகுபதி அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 35 | ,, S. ஞானசேகரம் அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 36 | ,, S. இராஜேந்திரம் அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 37 | ,, S. மகாதேவா அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 38 | ,, S. பாராசசிங்கம் அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 39 | ,, P. நவரத்தினராஜா அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 40 | திருவாளர்கள் சுந்தரம் கம்பனியார் | 1001-00 |
| 41 | திரு. K. C. செல்வத்துரை அவர்கள் | 1001-00 |
| 42 | ,, C. வன்னியசிங்கம் (M. P.) அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| 43 | ,, V. குமாரசாமி (M. P.) அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| | மொத்தம் | 40420.00 |

---

சாதிமத கோத்திரச் சச்சரவு இல்லாமல்
சகலரும் வந்தங்கூடிச்
சகோதரர்கள் போலநின் சந்நிதானப் பெருமை
சாற்றுதல்வே றெங்குமுண்டோ?
பாதிமதி சூடினோன் பழனிமலை உச்சியில்
பழம்நீயே யென்றபாலா!
பக்தர்கள் சகாயனே! பண்டிதர்கள் நேயனே
பன்னிருகை யுடைமெய்யனே!
ஆதி மூலாவென் றழைத்திட்ட அடியனுக்
கபயமருள் மால்மருகனே.
அன்றய னகங்காரம் அடக்கியருள் அண்ணலே
அழகனே! குமரனே! நின்
காதிலே யென்குறைகள் கேளாதிருப்பதுன்
காக்குமுறைக் கழகாகுமோ?
கதிர்காம க்ஷேத்திரந் தனிலமர்ந் தன்பர்க்குக்
கருணைமழை பொழிதெய்வமே.

க. இ.

---

# செய்தித் திரட்டு.

## பொலநறுவையில் சிவமணம் கமழ்தல்.

சுதந்தரமடைந்த தன் நற்பயனாக நாட்டின் பல பாகங்களில் ஆத்மீகத்துறையில் தோன்றியுள்ள மறுமலர்ச்சியின் எதிரொலியைச் சென்ற சனியும் ஞாயிறும் பொலநறுவையில் கூடிய சைவ மக்கள் கேட்டின்புற்றனர். அங்கே நீர்ப்பாய்ச்சல் உதவி என்சினியராக உத்தியோகம் பார்க்கும் திரு. A. தையல்பாகர் அவர்களின் நன் முயற்சியால் ஆரம்பித்துள்ள புலஸ்தியர் சபை அருந்தொண்டாற்றுகின்றது. அவருக்கு வலக்கரம்போலிருந்து சிவவழிபாட்டின் தத்துவத்தை விளக்கவும் அதனைக் கிரியாமார்க்கத்தில் காட்டவும் பஞ்சாப்பைச்சேர்ந்த பண்டிற் அவஸ்தியா என்னும் என்சினியரையுந் திருவருள் சேர்த்துள்ளது.

சோழரால் பதினோராம் நூற்றாண்டில் பிரதிஷ்டை செய்யப்பெற்று அணுவேனும் சிதைவுபடா முறையில் இன்னுமிருக்கும் சிவலிங்கப்பெருமானுக்கு சனிக்கிழமை காலை தொடக்கம் உச்சிப்போது வரைக்கும் உருத்திரா அபிஷேகம் வடநாட்டு முறைப்படி (காசியில் நடப்பதுபோல்) செய்யப்பட்டது. அன்று கூடிய பக்தர்களெல்லாரும் அதில் பங்கெடுத்துக்கொண்டனர். மாலையில் உபந்நியாசங்களும் விசேட ஆராதனைகளும் நடைபெற்றன. கூட்டத்திற்குத் தலைமையாயிருந்த திரு க. இராமச்சந்திரன் பொலநறுவையிலுள்ள முதலாம் இரண்டாம் சிவன் கோயில்களின் வரலாற்றைச் சுருக்கமாய் எடுத்துக்கூறி திருக்கேதீஸ்வரத் திருப்பணி விஷயத்தில் இலங்கைவாழ் சைவர்கள் ஒவ்வொருவருக்குமுள்ள பொறுப்பையும் விளக்கினார். பின்னர் பண்டிதர்கள் முருகேச பிள்ளையும், பூபால பிள்ளையும் சைவம், சிவத்தொண்டு, இளைஞர் கடமை முதலாம் விஷயங்கள் குறித்துப் பேசினர். இரவு நடந்த விசேட பூசை தமிழ் நாட்டார் அர்ச்சனையுடன் முடிவாயது. அடுத்த நாட்காலையில் சிவலிங்கத்திற்கும் நந்தியெம் பெருமானுக்கும் அபிஷேகங்கள் நடந்தன.

தூர இடங்களாகிய வதுளை, மட்டக்கிளப்பு, திருக்கோணமலை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், நாவலப்பிட்டி, கொழும்பிலிருந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து இவ்விருதின நிகழ்ச்சிகளிற் கலந்தது பொலநறுவையில் வசிக்கும் சிறுதொகையினரான சைவர்கட்கு அதிசயத்தையும் அளவற்ற மகிழ்ச்சியையுந்

கொடுத்து, திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபை, ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம், நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கம், அனுராதபுரம் விவேகானந்தசபை, இவைகளின் சார்பாக அவற்றின் காரியதரிசிகளான திருவாளர்கள் சு சிவசுப்பிரமணியம், செ. சரவணமுத்து, நா. முத்தையா, எஸ். வைரவிப்பிள்ளை சமுகமளித்தனர். கொழும்பு சத்சங்கத்திலிருந்து இருபது தொண்டர்கள் வந்திருந்தனர். அவர்களுள் ஒருவரான திரு. தி. மாணிக்கவாசகரின் தேவார திருவாசகப் பாடல்கள் அன்பர்கட்குப் பரவசமூட்டின. மறுபடியும் இவ்வித அற்புத நிகழ்ச்சியை எப்போது கண்ணுறுவோமென்ற வாஞ்சையுடனேயே பக்தர்கள் பிரிந்தனரெனலாம்.

பல நூற்றாண்டுகளாக பராக்கிரம சமுத்திரமென்னுங் குளக்கட்டின் மேலுள்ள அரசமரத்தடியில் வீற்றிருந்த பிள்ளையாருக்கு அரசினரால் ஐயாயிரம் ரூபாய் செலவில் ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. அதில் சீக்கிரம் பிரதிஷ்டை நடைபெறக்கூடும். இந்த முறையில் சைவந்தழைக்க உதவிபுரியும் அரசாங்கத்திற்கு சைவ உலகின் நன்றி என்றும் உரித்தாகுக.

## பலி நிறுத்தப்பட்டது.

நயினாதீவு தில்லைவெளிப்பிடாரி அம்மன் கோவிலில் அனேக காலமாக வருடந்தோறும் தொடர்ந்து நடத்தப்பட்டுவந்த பலியிடுதல் என்னும்இளிவளக்கும் சென்ற 1949ம் ஆண்டு யூன்மாதம் 25ந் திகதி நடந்தேறிய வேள்வியிலன்று மணிபல்லப தேவி பொது நிலைக் கழகத்தாரின் பெருமுயற்சியாலும் பொதுமக்களின் நன்நோக்கத்தாலும் நிறுத்தப்பட்டது.

## மாணிக்கவாசகசுவாமிகள் குருபூஜை விழா.

30-6-49 வியாழக்கிழமை தெல்லிப்பளை காசிவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. அத்தருணம் ஆர். என். சிவப்பிரகாசம், ந. மகேஸ்வரி, சி. பரமேஸ்வரி, எஸ். சிதம்பரப்பிள்ளை ஆதியோர் இனிய பிரசங்கங்கள் செய்தனர்.

9-7-49 சனிக்கிழமை நாவலப்பிட்டி இந்து வாலிப சங்க ஆதரவில் கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் திரு. க. வடிவேல் சாமி மாணிக்கவாசகர் என்பதுபற்றி பேசினார்கள். திரு. ஆர். திருநாவுக்கரசு ஆசிரியர் பண்ணுடன் திருமுறை ஓதினார். செல்வி சண்முகவல்லி அம்மையார்இனியதோர் சங்கீதக்கச்சேரி செய்தார்.

---


## சமரச சன்மார்க்க வாசிகசாலை.

---

**துரிய வெளி**
அல்லது
**எனது அனுபவம்**

ஆசிரியர்: துரியானந்தர்
"ஸ்ரீராமலிங்கநிலையம்"
பின்னலூர் P. O. S. A. DT.

விலை ரூபா 2/-

அன்பர் துரியானந்தர் பகவான் ரமணமகரிஷிகளைப்போன்ற மகான்களின் அருள்பெற்றுயர்ந்த ஓர் பக்தர். அவர் மனம் வாக்குக் காயங்களைக் கடந்திருக்கும் பரிசுத்தமான ஆன்மநிலையில் ஆன்மாவுக்கு ஆதார நிலையமாகிய மறைப்பில்லா சிதாகாசப் பெருவெளியிலே ஆழ்ந்து அறிந்தவற்றைத் துரிய வெளி அல்லது எனது அனுபவம் என்ற பெயரோடு வெளியிட்டுள்ளார். இஃது சாதகர்கட்கு ஓர் ஞானப்பொக்கிஷமாகும். இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்கள் பலவாயினும் முடிவிடம் எல்லார்க்கும் ஒன்றே இவ்வுண்மை இவ் ஆசிரியரின் அனுபவத்தில் தெளிவாக விளங்கும். ஆசிரியர். தன்னை இறைவன் இளமைதொடங்கி எவ்வெவ் உருவில் வந்து பக்குவப்படுத்தி ஆண்டான் என்பதை யாவரும் அறியத்தக்க பாஷையில் சொல்லியிருக்கிறார். இது ஆரம்பசாதகர்கட்கு ஏற்றதோர் வழிகாட்டியாகும்.

அகிலத்தை ஏமாற்ற வேஷம்போடும் கபடதாரிகளுக்கு "அகிலத்தை ஏமாற்ற அதிசய எண்ணங்கள்" என்றதலைப்பில் தகுந்த மறுமொழிகூறுகிறார் ஆசிரியர். மக்கள் நாளாந்த வாழ்க்கையில் பின்பற்றவேண்டிய பதினைந்து சன்மார்க்க போதனைகளும் ஒவ்வொருவரது வீட்டிலும் பெரிய எழுத்தில் எழுதித் தினமும் கண்ணுற் காணத்தக்க இடத்தில் தொங்கவிடுதற்கு ஏற்றவை. பொறுமையைப்பற்றிய கட்டுரை மனிதன் ஒவ்வொருவனும் தனது வாழ்வில் தினமும் வாசித்து சிந்திக்க வேண்டியதொன்று.

---

**'விவேகானந்தன்'** என்ற பெயரோடு கொழும்பு விவேகானந்த சபையாரால் வெளியிடப்பெறும். ஆங்கில தமிழ் மும்மாத வெளியீடு வரப்பெற்றோம். மக்களின் அஞ்ஞானத்தைப்போக்கி உண்மை வழியைக் காட்டுதற்குத் தொண்டுபுரிந்து 'விவேகானந்தன்' நீடுபெற்றுவாழ வேண்டுமென்று இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

Registered at the G. P. O. as News Paper.


# குங்குமம்

பெண்களின் இனிய
செந்தமிழ் மாதப் பத்திரிகை.

தாய்மாரின் வாழ்க்கைக்கு
ஓர் வழிகாட்டி

---

ஒவ்வொரு குடும்பத்திலும் அவசி
யம் இருக்கவேண்டியதோர்
சஞ்சிகை

ஆசிரியை: **எஸ். விசாலாக்ஷி,**

முரளி, பச்சையப்பன் ஹாஸ்டல் ரோட், சென்னை 10

## யோகி சுத்தானந்த பாரதியார்

[illegible] யற்றியது.

---

1 [illegible] 3-00
2 யோகசித்தி [மூலமும் உரையும்] 3-00
3 பா[illegible]ன்] 15 00

## புதுயுக நிலையம்—புதுச்சேரி.

இப்புஸ்தகங்களை குறிப்பிட்டுள்ள விலைக்கே

ஓங்கார நூலகம்,

புதுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம்.


கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்ப[illegible]ியர்: நா. முத்தையா, 'ஆத்மஜோதி' நிலையம் நாவலப்பிட்டி, சிலோன்.
நாவலப்பிட்டி, சரவண பிரஸில் பதிப்பித்தது. 16-7-49 பிரதிகள்.